**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருN.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2022ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை</u>

**<u>இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.98/2022</u>**

கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், வேட்டைக்காரன்புதூர் வழி, வே.காளியாபுரம் கிராமத்தில் மாகாளியம்மன் கோவில் வீதியில் கதவு எண் 3–1E என்ற விலாசத்தில் வசிக்கும் இந்து சுமார் 36 வயதுடைய விவேகானந்த செல்லியன் மனைவி V.கலைச்செல்வி.

... மனுதாரர்/வாதி

/ எதிர் /

கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், வேட்டைக்காரன்புதூர் வழி, வே.காளியாபுரம் கிராமத்தில், மாரப்ப கவுண்டர் வீதியில் கதவு எண்.1/33ல் வசித்து வரும் இந்து சுமார் 42 வயதுடைய லேட்.சண்முகவேல் மகன் K.S.சரவணகுமார். ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனு ஏ அட்டவணை விவசாய பூமிகளுக்கு செல்வதற்கு மனு பி அட்டவணையில் கண்டுள்ள வண்டித்தடத்தை மனுதாரர் பயன்படுத்துவதை எதிர்மனுதாரரோ, அவரின் வேலையாட்களோ, அவரின் உறவினர்களோ மற்றும் உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் ஆட்சேபணையோ, இடைஞ்சலோ, தடையோ, சேதமோ செய்யக்கூடாது என்றும், தோட்டத்தண்ணீரை தடத்தில் விடக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 02.03.2022

இம்மனுவானது கடந்த 31.10.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில்

வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## இறுதி உத்தரவு

1. முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு மனு ஏ அட்டவணை விவசாய பூமிகளுக்கு செல்வதற்கு மனு பி அட்டவணையில் கண்டுள்ள வண்டித்தடத்தை மனுதாரர் பயன்படுத்துவதை எதிர்மனுதாரரோ, அவரின் வேலையாட்களோ, அவரின் உறவினர்களோ மற்றும் உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் ஆட்சேபணையோ, இடைஞ்சலோ, தடையோ ஏற்படுத்தகூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

## சொத்துவிபரம்

**மனு A அட்டவணை சொத்து**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், (தற்பொழுது ஆனைமலை வட்டம்), காளியாபுரம் கிராமம் புலத்தில் பட்டா எண்.165 க்கு கட்டுப்பட்ட

க.ச.568/A நெ.காலை பு.ஹெக்.0.60.5 க்கு பு.ஏ.1.49 செ.க்கு தீர்வை ரூ.2.06 பை.ஷை பூமி முழுவதும்.

க.ச.569/A நெ.காலை பு.ஹெக்.2.55.0 க்கு பு.ஏ.6.30 செ.க்கு தீர்வை ரூ.10.65 பை.ஷை பூமி முழுவதும்.

க.ச.571/A நெ.காலை பு.ஹெக்.3.50.0 க்கு பு.ஏ.8.65 செ.க்கு தீர்வை ரூ.11.65 பை.இதில்,

க.ச.569/A நெ.காலைக்கும் ... வடக்கு

க.ச.571/A நெ.காலைக்கும் ... கிழக்கும், தெற்கும்

க.ச.571/B நெ.காலைக்கும் ... மேற்கு

இதன் மத்தியில் பு.ஏ.2.46 செ.க்கு பு.ஹெக்.0.99.5 ஏர்ஸ்.

ஆக காலைகள் மூன்றுக்கு ஒட்டு பு.ஏ.10.25.செ.கக்கு பு.ஹெக்.4.15.0 ஏர்ஸ். இந்த பத்து ஏக்கர் இருபத்தி ஐந்து செண்ட் விஸ்தீரணமுள்ள புஞ்சை பூமியும், க.ச.569/A நெ.காலையிலுள்ள கிணறும், ஷை கிணற்றில் வைக்கப்பட்டுள்ள 7.5 எச்.பி. மின் மோட்டார் பம்ப் செட்டும், மின் இணைப்பு எண்.440ம் ஆகியவற்றில் முழு பாத்தியமும், ஷை பூமிகளுக்கு கிழபுறமுள்ள பொது வண்டித்தடத்திலிருந்து ஆள், கால்நடை வண்டி, கனரக வாகனங்கள் போகவர உண்டான பாத்தியங்களும், மற்றும் அசல் வழக்கு எண்.126/2013ல் கண்டுள்ளபடி உண்டான அனைத்து பாத்தியங்களும் வகையறா சகிதம்.

**<u>மனு B அட்டவணை சொத்து</u>**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், (தற்பொழுது ஆனைமலை வட்டம்), V.காளியாபுரம் கிராமம் க.ச.571/Aல் பிரதிவாதி பூமியின் கிழபுறமும், உப்பாறு கிளை வாய்க்காலுக் மேபுறமும் அமைந்துள்ள தென்வடல் தடத்தில் தெற்கு முகமாக வந்து க.ச.571/A நெ.காலையில் வாதி பூமியின் வடகோட்டில் மேற்கே திரும்பி கிழமேலாக வந்து வாதி பூமியின் மேல்கோட்டில் தெற்கு நோக்கி வந்து வாதியின் க.ச.569/A, க.ச.568/A பூமிக்கு செல்லும வண்டித்தடம். தாவா வரைபடத்தில் பச்சை வர்ணமிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவு 2022ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.